[17th August 1963

தட்டிக் கழிக்க சர்ந்தர்ப்பம் இல்லாமல், வேகமாக நடவடிக்கை எடுக்கப்படுவது நியாயம், அது 3,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாது காப்பாக இருக்கும் என்று அரசாங்கம் உணருகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் அதைத்தான் சொன்னேன். அரசாங்கம் கலெக்டரை துரிதமாக ரிப்போர்ட் அனுப்பும்படி கேட்கும். ரிப்போர்ட் வந்ததும் அதைப் பார்த்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய அரசாங்கம் முன் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செயற்கை வைரத் தொழிலாளர்கள் (கடன் வசதி)

* 176 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை State Aid to Industries Act -ன்கீழ் அரசாங்கம் பொற்கொல்லர்களுக்கு கடன் வழங்குவதைப்போல அதே தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் செயற்கை வைரத் தொழிலாளர்கள், செயற்கை வைரக்கடைச் சிப்பந்திகள், நகைக் கடைச் சிப்பந்திகள் முதலியவர்களுககும் கடன்தர உத்தேசமுண்டா ?

(இ) கொடுக்கப்படுகிற கடன்தொகையைக் கொண்டு அரசாங் கத்தினரால் குறிப்பிடப்படும் தொழில்களைத் தவிர வேறு எந்தத் தொழிலையும் செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிட் டுள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The question is under the consideration of the Government.

(b) The loan is given for setting up even commonplace and processing industries. A loanee cannot however start an industry other than that for which the loan is granted.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அவர்கள் எந்தத் தொழில் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இருபத்தைந்து தொழில்கள், என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்று பட்டியல் கொடுத் திருக்கிறோம். அதற்கு வெளியில் இருக்கும் தொழில்களை ஆரம் பிக்கவேண்டுமானால் அவைகளையும் சேர்த்துக்கொள்வது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

மருத்துவக் கல்லூரி (சேலம்)

* 177 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அங்கத்தினர்கள் பலமுறை கேட்டுக்கொண்டபடி சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தும் உத்தேச முண்டா ?